**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 173/2018**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 7 |
| Name (திரு/திருமதி) | : தாகூர் |
| Father's Name/ Husband's Name | : அப்பாஜி |
| Village & Taluk | : ஆவடி |
| Calling | : முதுநிலை உதவி மருத்துவர் (ஓய்வு) |
| Age | : 64 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.10.2025**

3 ம் எதிரி ஆஜர். 1,2,4,5 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

1. நான் முதுநிலை உதவி மருத்துவராக பணி செய்து கடந்த 2019 ம் வருடம் பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 06.06.2016 அன்று செஞ்சி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்த போது இரவு 08.45 மணியளவில் உலகநாதன் என்பவர் சிகிச்சைக்கு வந்தார். அவரை விசாரணை செய்ததில் தெரிந்த ஐந்து நபர்கள் அன்று காலை 07 .00 மணியளவில் அவரது கிராமத்தில் வைத்து தடியால் தாக்கியதாக சொன்னார். அவரை பரிசோதனை செய்ததில் அவர் சுயநினைவுடன் இருந்தார். பின்வரும் காயங்கள் காணப்பட்டன. 1. தலையில் வலது பகுதியில் 3 c.m அளவிலான கிழிந்த காயம் காணப்பட்டது. 2. வலது முழங்கை பகுதியில் 3 x 3 c.m அளவிலான சிராய்ப்பு காயம் காணப்பட்டது. 3. மார்பு பகுதியில் வலி இருந்ததாக கூறினார் வெளிப்புற காயம் எதுவும் இல்லை. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை வழங்கினேன். அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து சொற்ப காயம் என்று சான்று வழங்கினேன். **மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2. அன்றைய தினே** இரவு 08.50 மணியளவில் இந்துமதி என்பவர் சிகிச்சைக்கு வந்தார். அவரை விசாரணை செய்ததில் தெரிந்த ஐந்து நபர்கள் அன்று காலை 07 .00 மணியளவில் அவரது கிராமத்தில் வைத்து தடியால் தாக்கியதாக சொன்னார். அவரை பரிசோதனை செய்ததில் அவர் சுயநினைவுடன் இருந்தார். பின்வரும் காயங்கள் காணப்பட்டன. 1. இடது கையில் வலி இருப்பதாக கூறினார். 2. இடது முழங்கை பகுதியில் 2 x 2 c.m அளவிலான சிராய்ப்பு காயம்

காணப்பட்டது. 3. வலது இடுப்பு பகுதியில் வலி இருந்ததாக கூறினார். அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை வழங்கினேன். அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து சொற்ப காயம் என்று சான்று வழங்கினேன். **மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. காயமடைந்த இரு நபர்களும் என்னிடம் சிகிச்சைக்கு வந்தபோது சுயநினைவுடன் இருந்தனர் என்றால் சரிதான். மேற்படி நபர்களின் ஆடைகளில் ரத்த கறை காணப்பட்டதா என்றால் இல்லை. காயத்தின் நிறத்தை வைத்து அதன் வயதை குறிப்பிட இயலும் என்றால் சரிதான். காயத்தின் நிறம் மற்றும் வயதை நான் விபத்து பதிவேட்டில் குறிப்பிடவில்லை. காயத்தின் வயதை குறிப்பிட்டிருந்தால் அதனை வயதை நிர்ணயிக்க முடியும் என்றால் சரிதான்.

2. பொதுவாக காயமடைந்த நபர்கள் சிகிச்சைக்கு வரும்போது அவர்கள் தாக்கப்பட்ட இடத்தை குறிப்பாக குறிப்பிட்டு சொல்வது வழக்கம் என்றால் சரிதான். இந்த நபர்கள் அவ்வாறான இடத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். காயத்தின் நிறம் குறிப்பிடப்படாததால் அவர்கள் குறிப்பிட்ட காயமானது காலை 07.00 மணிக்கு முன்னதாகவோ அல்லது பின்பாகவோ ஏற்பட்டிருக்க வாய்ப்புகள் உள்ளது என்றால் சரிதான்.

3. உலகநாதன் என்பவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். இந்த நபருக்கு Case sheet பராமரிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி நபருக்கு எந்த வகையான சிகிச்சை அளிக்கப்பட்டது என்ற விவரம் மேற்படி case sheet ல் தான் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். மேற்படி நபருக்கு தலையில் காயம் காணப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் அதற்காக X ray எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. நான் அவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்பதால் அவருக்கு X Ray எடுக்க பரிந்துரைக்கவில்லை என்றால் சரிதான்.

4. காயமடைந்த மேற்குறிப்பிட்ட நபர் மூன்று நபர்களை தாக்கிவிட்டு அவர்களிடம் இருந்து தப்பி ஓடும்போது நிலை தடுமாறி கீழே விழுந்திருக்கும்பட்சத்தில் நான் காயச்சான்றில் குறிப்பிட்டுள்ள காயங்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது என்றால் சரிதான். வலி இருப்பதாக காயமடைந்த நபர்கள் பொய் உரைக்க வாய்ப்புகள் உள்ளது என்றால் சரிதான். காயமடைந்த நபர்களை நான் தொட்டு பார்த்து வலி இருப்பதை உறுதி செய்து கொள்ளவில்லை என்றால் சரிதான். காவலர்கள் என்னிடம் தடியை காண்பித்து கருத்துரை பெற்றிருந்தால் காயமடைந்த நபர்களுக்கு ஏற்பட்ட காயத்தை பொறுத்து துல்லியமான கருத்துரை வழங்கி இருக்க இயலும் என்றால் சரிதான்.

5. இந்துமதி என்பவர் தவறி கீழே விழுந்திருக்கும்பட்சத்தில் காயச்சான்றில் குறிப்பிட்டுள்ள காயங்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது என்றால் சரிதான். புலன் விசாரணை அதிகாரி என் முன்னிலையில் என்னுடைய வாக்குமூலத்தை பதிவு செய்யவில்லை.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.